## திராவிட இயக்க இதழ்கள் - 'தமிழாலயம்'



சென்னை பச்சையப்பன் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர்களுள், தங்களின் முன்னெழுத்துகளால் அறியப்படுபவர்கள் இருவர். ஒருவர், மு.வ. எனும் மு.வரதராசனார். இன்னொருவர், மு.பி.பா. எனும் மு.பி.பாலசுப்பிரமணியன். மாணவப் பருவத்திலேயே திராவிட இயக்கத்தில் ஆழங்கால்பட்ட மு.பி.பா தொடங்கி, நடத்திய இதழ் 'தமிழாலயம்'.

'தன்னம்பிக்கையாய் ஒரு தமிழியக்கம்' எனும் தாரக மந்திரத்துடன் இந்த இதழ், 2003 ஜனவரி 15 அன்று இருமாத இதழாகத் தொடங்கப்பட்டது.

"தமிழ், தமிழின, தன்மான, திராவிட இயக்கத்தின் ஆய்வுத் தளமாக - குவலயமெங்கும் குறள் நெறியைப் பறைசாற்றும் கொள்கை முரசமாகத் தனது முத்திரையைப் பதிக்கும்.உலகப் பொதுமறையாம் திருக்குறளை இந்தியத் திருநாட்டின் தேசிய நூலாக ஏற்பளிப்புச் செய்திடவும், உலகின் மூத்த மொழியான நம் தாய்த் தமிழை செவ்வியல் மொழியாக மைய அரசு அறிவிப்புச் செய்திடவும் அயராது பாடுபடும்" என்ற இரண்டு முக்கிய இலக்குகளை நோக்கி இந்த இதழ் பயணித்தது.

கட்டுரைகள் உள்ளிட்ட படைப்புகள் தவிர்த்து, தனது தலையங்கங்களுக்காக இந்த இதழ் பரவலான வரவேற்பைப் பெற்றது. அவற்றில் சிறந்த 35 தலையங்கங்கள் தேர்வு செய்யப்பட்டு 'தமிழாலயச் சுவடுகள்' என்ற தலைப்பில், தொகுப்பாக வெளிவந்துள்ளன.

## ஃப்ளாஷ்பேக்





பா. அசோக்குமார்

### காதுகளில் இன்று வரை ரீங்காரம்!

1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் நான் பணியாற்றும் போது, தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பாக மாநில இணைச் செயலாளர் பொறுப்புக்குப் போட்டியிட்டேன். அப்போது இன்றைய தலைமை நிலைய அலுவலகச் செயலாளர் பூச்சி முருகன் அவர்கள் பொதுச் செயலாளராகவும், நான் இணைச் செயலாளராகவும் சுமார் 3,000 வாக்குகள் வித்தியாசத்தில் வென்று தேர்ந்தெடுக்கப்பட்டோம். இதைத் தொடர்ந்து, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை சென்னை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். அப்போது "எத்தனை வாக்குகள் வித்தியாசத்திலய்யா ஜெயிச்ச?" என்று அவர் கேட்ட கேள்வி, என் காதுகளில் இன்று வரை ரீங்காரம் இடுகிறது.

**- பா. அசோக்குமார், 33வது வட்டப் பொருளாளர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### பலமான அடித்தளம் அமைந்தது!

1957-ஆம் ஆண்டு, தேர்தல் வெற்றிக்குப் பின்னர், சிதம்பரம் நகரில் நடந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார் பேரறிஞர் அண்ணா. கழகத்தின் வெற்றியைப் பறைசாற்றும் வகையில், அவர் உரை அமைந்தது. "என்ன, இன்னும் சுற்றுச் சுவரே எழும்பவில்லை, ஜன்னல் கதவு பொருத்தவில்லை, கதவு இருக்கவேண்டிய இடம் தெரியவில்லை, கூரையோ இன்னமும் இல்லை, இதைக் காட்டி இவ்வளவு மகிழ்கின்றானே என்பர்; ஆனால், அடித்தளம் போட்டவருக்குத் தெரியும், இந்த அடித்தளம் போடுவதற்கு, எவ்வளவு அரும்பாடு பட்டேன், என்று. நாம் போட்டிருக்கின்ற இந்த அடித்தளம் சாமானியமானது மல்ல, காலத்தாலே தோண்டி எறியப்படக்கூடியதுமல்ல, காதகர்கள் எவ்வளவு பெரிய கல் நெஞ்சத்தை கடப்பாரையாக்கி அவர்கள் தோண்டினாலும், போட்டிருக்கும் இந்த அடித்தளத்தை அவர் களாலே தோண்டி எறிய முடியாது அந்த அளவுக்குப் பலமான அடித்தளம் போட்டாகிவிட்டது" என தீர்க்கமாக உரையாற்றினார்.

## முதன் முதலில் 18

ந.வினோத்குமார்

**திராவிட இயக்க அடையாளங்களை, நடைமுறைகளைப் பற்றி விளக்கும் 'திராவிட மரபு' தொடர் இது...**



# உயிர்ச் சிலை!

அப்போதெல்லாம் தலைவர்கள் யாரேனும் இறந்து போன பிறகுதான், அவர்கள் நினைவாக சிலை வைக்கும் வழக்கம் இருந்தது. அன்று உயிரோடு இருந்த மனிதர்களுக்குச் சிலை வைப்பது என்பது மிகவும் அரிதினும் அரிதான விஷயமாக இருந்தது.

அப்படி அரிதாக, மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி அவர்களுக்குத்தான் நாட்டின் பெரும்பாலான இடங்களில் சிலைகள் வைக்கப்பட்டன. தமிழ்நாட்டிலும் அவரது சிலைகள் திறந்து வைக்கப்பட்டன. ஆனால், அவையெல்லாம் அன்பின் மிகுதியால் காந்திப் பற்றாளர்கள் மட்டுமே மேற்கொண்ட விஷயமாக இருந்தன.

இந்நிலையில், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோ ருக்கு அவர்கள் உயிருடன் இருக்கும் போதே சிலைகள் வைக்கப்பட்டன.

உயிருடன் இருக்கும் போதே சிலை வைக்கப்பட்ட பெருமை, முதன் முதலில் தந்தை பெரியாருக்குத்தான் கிடைத்தது. 1967-ஆம் ஆண்டு செப்டம்பர் 17 அன்று முதன்முதலில் திருச்சியில் பெரியாருக்கு, சிலை வைத்துப் பெருமைப்படுத்தினார் அன்றைய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா.

தான் உயிருடன் இருக்கும்போதே அவருக்குச் சிலை வைக்க அனுமதி கேட்டபோது, அவர் இரண்டு விஷயங்களுக்காக ஒப்புக்கொண்டார்.

ஒன்று, உயிரோடு இருக்கும்போது சிலை வைத்தால், அவர்கள் சீக்கிரம் இறந்துவிடுவார்கள் என்கிற மூட நம்பிக்கை அன்று இருந்தது. அதை உடைக்கவேண்டும் என்பதற்காக. இரண்டு, தனது கருத்துகள் மக்களிடம் சென்று சேர வேண்டும் என்பதற்காக..!

**எந்தக் கருத்துகளை நான் எடுத்துச் சொன்னேனோ அந்தக் கருத்துகள் சிலையைப் பார்ப்பவரிடம் சென்றடைய வேண்டும்!**

இது குறித்து அவர், "என் உருவம் சிலை வடிவத்தில் எப்படி வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும். சிலை வடிவத்தினை விட நான் பிரச்சாரம் செய்த பகுத்தறிவுக் கருத்துகள் சிலை பீடத்தில் பொறிக்கப்பட வேண்டும். எந்தக் கருத்துகளை நான் எடுத்துச் சொன்னேனோ அந்தக் கருத்துகள் சிலையைப் பார்ப்பவரிடம் சென்றடைய வேண்டும்" என்றார்.

அண்ணாவுக்குப் பிறகு கலைஞர் முதலமைச்ச ராக இருந்த காலங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட பெரியார் சிலைகள் திறந்து வைக்கப்பட்டன. பின்னாட்களில் கலைஞருக்குச் சிலை வைக்க வேண்டும் என்று பெரியார் விரும்பினார். அதுவும் நடந்தது.

இவ்வாறு உயிருடன் இருக்கும் போதே ஒருவருக்குச் சிலை வைப்பதற்குச் சித்தாந்த ரீதியில் தெளிவையும் புரிதலையும் ஏற்படுத்திய விதத்தில், திராவிட இயக்கம் முன் நிற்கிறது. அந்த மரபை, இன்று பல கட்சிகளும் பின்பற்றுகின்றன.

...அடையாளம் அறிவோம்.

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ் 18

**"புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்" என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# நான் கண்ட அண்ணா! நம் அருகில் அண்ணா!

நம் கழகத்தைத் தோற்றுவித்த பேரறிஞர் அண்ணா குறித்து, அவருடைய தம்பிகள் ஒவ்வொருவருக்கும் பெரிய அனுபவங்கள் இருந்தன. பலரும் பல வகையில் அவற்றைப் பகிர்ந்தார்கள். முத்தமிழறிஞர் கலைஞர், அண்ணா மறைந்த போது எழுதிய இரங்கற்பா இன்று வரை புகழ்பெற்ற ஒன்று. பேராசிரியர் அவர்கள் 'மாமனிதர் அண்ணா' என்றும், கவிஞர் கருணானந்தம் 'அண்ணா சில நினைவுகள்' என்றும் புத்தகங்களை எழுதினர்.

**பேரறிஞர் அண்ணாவின் அருகில் இருக்கும் உணர்வைப் பெற விரும்பும் அனைவரும் படிக்க வேண்டிய புத்தகம் இது.**

அவ்வரிசையில், அண்ணாவின் ஓம்லேண்ட் (HOMELAND) இதழின் துணை ஆசிரியராக பணியாற்றியவரும், அண்ணாவால் 'HE IS MY PRODUCT' என்று அழைக்கப்பட்டவருமான எம்.எஸ்.வேங்கடாசலம் (MSV) அவர்கள் எழுதிய 'நான் கண்ட அண்ணா' என்ற நூல் முக்கியத்துவம் வாய்ந்தது.

முத்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர் க. அன்பழகன், அருளாளர் ஆர்.எம். வீரப்பன், முன்னாள் மேயர் சா. கணேசன் ஆகியோரது அணிந்துரையோடு அண்ணா நூற்றாண்டில் (2008) இந்நூல் வெளியாகி இருக்கிறது. அண்ணாவை அருகிலிருந்து பார்த்தவர் என்ற முறையில், அதுவரை யாரும் அறிந்திராத பல்வேறு புதிய செய்திகளை இந்நூல் மூலம் நமக்கு அளிக்கிறார்.



மகாத்மா காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட போது, வானொலியில் அண்ணா வாசித்த இரங்கல் உரை இந்நூல் ஆசிரியரைக் கவர்கிறது, அதன் பின், 'வேலைக்காரி' படம் பார்க்கிறார், பின்னர் அண்ணாவின் உரையை நேரில் கேட்கிறார், 1955-ஆம் ஆண்டு திருச்சியில் அண்ணாவைச் சந்திக்கிறார். கழகத்தில் ஆழ்ந்த பிடிப்பு ஏற்பட, இந்த சம்பவங்களே பிரதான காரணங்களாக அமைகின்றன.

பள்ளி ஆசிரியராக சில காலம் பணியாற்று கிறார், பள்ளியில் ஏற்பட்ட பிரச்சினையால் ஆசிரியர் பணியில் இருந்து விலகி, அண்ணாவின் அழைப்பின் பேரில், காஞ்சிபுரம் செல்கிறார். 1957 -ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடங்கப்பட்ட 'ஓம்லேண்ட்' ஆங்கில இதழின் துணை ஆசிரியராகப் பணிக்குச் சேர்கிறார்.

பிறகு முழுக்க முழுக்க அண்ணாவுடனான அனுபவங்கள்தான் இந்நூலை ஆக்கிரமித்துள்ளன.

அண்ணா, தான் நடத்தும் பத்திரிகையை எப்படி மெய்ப்பு பார்ப்பார், எப்படி எழுதுவார், தன் தம்பிகளை எப்படி அரவணைப்பார், எத்தனை எளிமையாக இருப்பார் எனப் பல சம்பவங்கள் மூலம் நமக்கு விவரிக்கிறார்.

ம.பொ.சி, தமிழவேள் பி.டி.இராஜன், ஈ.வெ.கி.சம்பத், வி.பி.ராமன், எம்.ஜி.இராமச் சந்திரன், நாவலர் நெடுஞ்செழியன், கண்ணதாசன், இராம.அரங்கண்ணல், அன்பில் தர்மலிங்கம், கே.ஏ.மதியழ கன், அன்னை சத்தியவாணி முத்து, ஏ.வி.பி.ஆசைத்தம்பி, பேராசிரியர் அன்பழகன், முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோருக்கும் அண்ணா வுக்கும் இடையே நடை பெற்ற சுவாரசியமான பல சம்பவங்கள், இந்நூலில் இடம் பெற்றுள்ளன. கட்சி நடத்துவது என்பது அசாதாரணமானது என்பதை இந்தச் சம்பவங்கள் நமக்கு மீண்டும் மீண்டும் உணர்த்துகின்றன.


'நான் கண்ட அண்ணா' என்ற இந்நூலின் மூலம் அண்ணாவின் அருகிலிருந்து, தான் கண்ட அரிய பண்புகளை வியப்பு குன்றாமல் அப்படியே நமக்குக் கடத்துகிறார். பேரறிஞர் அண்ணாவின் அருகில் இருக்கும் உணர்வைப் பெற விரும்பும் அனைவரும் படிக்க வேண்டிய புத்தகம் இது.

...வாசிப்போம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

526

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.